பக்கங்கள் 23+ 03

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | ஆடி 03 சனிக்கிழமை 19.07.2024 | அதிர்வு 343

## வாகன விபத்தில் 10 பேர் படுகாயம்




வாகன விபத்தில் 10 பேர் படுகாயம டைந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித் துள்ளனர்.

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்





# யுத்தம் நடந்த மண்ணில் புதைகுழிகள் இருக்குமாம்

## செம்மணியைத் தோண்டுவது தேவையற்றது என்று வன்மத்தைக் கக்குகின்றார் கம்மன்பில

"யுத்தம் நடந்த மண்ணில் எங்கு தோன்றினாலும் மனிதப் புதைகுழிகள் இருக்கத்தான் செய்யும். செம்மணி மனிதப் புதைகுழியில் அகழ்வுப் பணி மேற்கொள் வது தேவையற்றது."

- இவ்வாறு பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பில் கருத்துரைக்கும்போதே அவர் மேற் கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், 03▶

# இளம் யுவதி ஒருவர் வெட்டிப் படுகொலை

## தென்னிலங்கையில் கொடூரம்



தென்னிலங்கையில் இளம் யுவதி ஒருவர் வெட்டிப் படுகொலை செய்யப்பட் டுள்ளார்.

இந்தக் கொடூர சம்பவம் அம்பாந் தோட்டை, கட்டுவனை பிரதேசத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

காணித் தகராறில் உறவினர்களுக் கிடையிலான வாள்வெட்டு மோதலின் போதே மேற்படி யுவதி உயிரிழந் 03▶




# கோர விபத்தில் சிறுவன் மரணம்

வீதி விபத்தில் சிறுவன் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் கம்பஹா மாவட்டம், மினுவாங்கொடை பிரதேசத்தில் நேற்று வெள்ளிக்கிழமை மாலை இடம் பெற்றுள்ளது.

உறவினரின் வீட்டுக்கு வீதியால் நடந்து சென்ற சிறுவனைப் பின்னால் வந்த கார் மோதியதில் ஏற்பட்ட விபத்தில் மேற்படி சிறுவன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

மினுவாங்கொடை பிரதேசத்தைச் சேர்ந்த 13 வயது சிறுவனே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார். 03▶



# “பயங்கரவாதத் தடைச் சட்டத்தை உடன் இரத்துச் செய்”

## யாழ்ப்பாணத்தில் கையெழுத்துப் போராட்டம்

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இல்லாது செய்யக் கோரி நாடு முழுவதும் முன்னெடுக்கப்பட்டு வரும் அடையாளக் கையெழுத்துப் போராட்டம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

சம உரிமை இயக்கம் அமைப்பினரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற இந்தப் போராட்டம் யாழ். மத்திய பஸ் நிலையத்தின் முன்பாக இன்று சனிக்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

இன்னொரு அடக்குமுறைச் சட்டம் வேண்டாம், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இரத்துச் செய், காணாமல் ஆக்கப்பட்ட அனைவருக்கும் இப்போதவது நீதி வழங்கு, அனைத்து தேசிய இனத் தவருக்கும் சம உரிமைகளை உறுதி செய்யும் புதிய அரசமைப்புக்காகப் போராடுவோம் போன்றவற்றை வலியுறுத்தியே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.













# சமகால அரசியல் நிலவரம் குறித்து யாழ்ப்பாணத்தில் கலந்துரையாடல்

சமகால அரசியல் நிலவரம் தொடர்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தலைமையிலான தமிழ்த் தேசியப் பேரவையின் ஏற்பாட்டில் ஊடகவியலாளர்களுடனான கலந்துரையாடல் இன்று சனிக்கிழமை நடைபெற்றது.

யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விடுதியில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளர் செல்வராசா கஜேந்திரன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் சட்டத்தரணி க.சுகாஷ், தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொன்னுத்துரை ஐங்கரநேசன், வேலணை பிரதேச சபை உறுப்பினர் நாவலன் மற்றும் ஊடகவியலாளர்கள் கலந்துகொண்டனர்.

# கொழும்பில் களியாட்ட விடுதிக்கு முன்பாகத் துப்பாக்கிப் பிரயோகம்

கொழும்பு – தலவத்துகொட பிரதேசத்தில் உள்ள இரவு நேரக் களியாட்ட விடுதி ஒன்றுக்கு முன்பாகத் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது என்று தலங்கமை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் இன்று சனிக்கிழமை அதிகாலை இடம்பெற்றுள்ளது.

சம்பவ தினத்தன்று இரவு நேர களியாட்ட விடுதிக்கு வருகை தந்திருந்த இரண்டு தரப்பினர்களுக்கு இடையில் தகராறு ஏற்பட்டுள்ளது.

தகராறின் போது அங்கிருந்த நபர் ஒருவர் ரிவோல்வர் ரக துப்பாக்கியால் நான்கு தடவைகள் துப்பாக்கிச்சூடு நடத்தியுள்ளார்.

எவ்வாறிருப்பினும் இந்தத் துப்பாக்கிச்சூட்டின் போது எவருக்கும் எந்தவித காயங்களும் ஏற்படவில்லை.

இதனையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் அங்கிருந்த இருவரை உடனடியாகக் கைது செய்துள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைத் தலங்கமை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## யுத்தம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

“வடக்கு யுத்தம் நடந்த மண். இந்த மண்ணில் எங்கு தோன்றினாலும் மனிதப் புதைகுழிகள் இருக்கத்தான் செய்யும். யுத்தத்தில் உயிரிழந்தவர்கள் பலர் மண்ணுக்குள்தான் புதைக்கப்பட்டார்கள். எனவே, அந்தப் புதைகுழிகள் யுத்தத்தின் பின்னர் வெளிக்கிளம்பும்போது பலரும் வெவ்வேறு விதமாகக் கருத்து வெளியிட்டு வருகின்றனர்.

செம்மணியில் தற்போது கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழியைப் பெருமளவு நிதிகளை வீண்விரயம் செய்து அரசு அகழ்கின்றது.இது தேவையற்றது.

அந்தப் புதைகுழிக்குள் இருந்து எலும்புக்கூடுகளாக மீட்கப்படுபவர்கள் உண்மையில் எந்த இனத்தைச் சேர்ந்தவர்கள் என்று தெரியாது. ஏனெனில் யுத்தத்தில் மூன்று இனத்தவர்களும் உயிரிழந்தனர். எனவே, செம்மணி மனிதப் புதைகுழியைத் தோண்டுவது மீண்டும் இன வன்முறைக்கே வழி வகுக்கும்.” – என்றார்.

## இளம் யுவதி..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துள்ளார். தனியார் நிறுவனம் ஒன்றில் கடமை யாற்றும் 22 வயது யுவதியே உயிரிழந் துள்ளார்.

சம்பவத்தில் படுகாயமடைந்த இளம் யுவதியும், அவரின் தந்தையும், சகோதரரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டனர். எனினும், சிகிச்சை பலனின்றி யுவதி உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பில் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார், மேற்படி சம்பவம் குறித்து உயிரிழந்த யுவதியின் உறவினர்கள் மூவரைக் கைது செய்துள் ளனர்.

## வாகன...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தச் சம்பவம் அநுராதபுரம், திரப்பனை பகுதியில் இன்று சனிக்கிழமை காலை இடம்பெற்றுள்ளது.

லொறி ஒன்றுடன் வான் ஒன்று மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

கெகிராவையில் இருந்து அநுராதபுரம் நோக்கிச் சென்ற வானில் 13 பேர் பயணித்திருந்தனர். அந்த வானில் பயணித்தவர்களில் 10 பேரே விபத்தில் படுகாயமடைந்துள்ளனர். அவர்கள் அனுராதபுரம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைகளுக்காக அனுமதிக்கப் பட்டுள்ளனர். விபத்து தொடர்பில் திரபனை போக் குவரத்துப் பிரிவுப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வரு கின்றனர்.

## கோர..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காரின் சாரதியைக் கைது செய்துள்ள பொலிஸார், விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வரு கின்றனர்.

# ஈஸ்டர் தாக்குதல் விசாரணை: சிலர் விரைவில் சிறைக்குள்!

## அமைச்சர் நளிந்த தெரிவிப்பு

உயிர்த்த ஞாயிறு தினத் விசாரணைகளின் பிரகாரம் எதிர்காலத்தில் சிலர் கைது செய்யப்படலாம் என்று அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் இதுவரை வெளியாகாத பல தகவல்கள் அண்மைக்கால விசாரணைகளில் தெரியவந்துள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பான விசாரணைகள் எந்த மட்டத்தில் உள்ளன என்று அமைச்சர் நளிந்தவிடம் வினவிய போதே அவர்



மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் அசாத் மௌலானா உட்பட தேவையான நபர்களை நாட்டுக்குக் கொண்டு வருவதற்கு இராஜதந்திர நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இந்த விடயத்தில் சந்தேகம் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை.

இதுவரையில் வெளிவராத பல தகவல்கள் விசாரணைகளில் வெளிவந்த வண்ணம் உள்ளன. அவற்றின் ஒரு பகுதியையே பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் நாடாளுமன்றத்தில் பகிரங்கப்படுத்தினார்.

விசாரணைகளின் பிரகாரம் எதிர்காலத்தில் சிலர் கைது செய்யப்படலாம். விசாரணைகள் இன்னும் நிறைவு பெறவில்லை. அது விரைவுபடுத்தப்பட்டு, நீதிமன்றம் ஊடாக உரிய நடவடிக்கை இடம்பெறும்.” – என்றார்.



# பொத்துவில் கடலில் மூழ்கிய 2 இளைஞர்கள் உயிருடன் மீட்பு

அம்பாறை, பொத்துவில் கடலில் மூழ்கி உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த இரண்டு இளைஞர்கள் பொலிஸ் உயிர்காப்புப் பிரிவினரால் காப்பாற்றப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்றுள்ளது.

சம்மாந்துறைப் பகுதியைச் சேர்ந்த 22 மற்றும் 23 வயதுடைய இரண்டு இளைஞர்களே இவ்வாறு காப்பாற்றப்பட்டுள்ளனர்.

இவர்கள் இருவரும் பொத்துவில் கடலில் நீராடிக் கொண்டிருந்த போது திடீரென நீரில் மூழ்கியுள்ளனர்.

இதன்போது அங்கு கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் உயிர்காப்புப் பிரிவினர், கடலில் மூழ்கிய இருவரையும் காப்பாற்றி அவர்களுக்கு முதலுதவி அளித்துள்ளனர்.

# எமது அரசை வீழ்த்தக்கூடிய வலுவான எதிரணி இல்லை!

## அமைச்சர் விஜித ஹேரத் தெரிவிப்பு

“நாட்டில் இன்று பல உதிரிகளாகப் பிரிந்து எதிரணிகள் வங்குரோத்து அடைந்துவிட்டன. வலுவான எதிரணி என்று தற்போது ஒன்றும் இல்லை.”

– இவ்வாறு வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

“மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை ஜனாதிபதி உரிய வகையில் நிறைவேற்றி வருகின்றார். அனைத்து உறுதிமொழிகளையும் 24 மணி நேரத்துக்குள் நிறைவேற்றிவிட முடியாது. கட்டம் கட்டமாக அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும். இது தொடர்பான புரிந்துணர்வு மக்களுக்கு உள்ளது.

அரசின் பயணம் மிகச் சிறப்பாகவே சென்றுகொண்டிருக்கின்றது. ஆனால், எதிரணிகள்தான் வங்குரோத்து அடைந்துள்ளன. இன்று பலமான எதிரணி என்று ஒன்றும் இல்லை. அதனால்தான், அரசுக்கு எதிராகப் போலிப் பரப்புரைகளை மேற்கொள்ள வேண்டிய



நிலைக்கு அவை தள்ளப்பட்டுள்ளன.

மக்களின் பணத்தைக் கொள்ளையிட்டவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்களைப் பிடிக்கும் நடவடிக்கை விரைவில் மேற்கொள்ளப்படும்.” – என்றார்.





# எமது பண்பாட்டின் வகிபாகம் அரசியலில் இன்றியமையாதது

## ஆடிப்பிறப்பு விழாவில் பொ. ஐங்கரநேசன் சுட்டிக்காட்டு

விடுதலைக்காகப் போராடும் இனமொன்று மக்களை எழுச்சி கொள்ள வைத்து ஒருங்கிணைக்கத் தேசியவாதத்தை முன்னிலைப்படுத்துகின்றது.

இதில் அந்த இனத் தேசியத்தின் கூறுகளான மொழி, பாரம்பரிய நிலபுலங்கள், பண்பாடு ஆகியவை முதன்மை பெறுகின்றன.

ஆனால், தமிழ்த் தேசிய அரசியலை முன்னெடுக்கும் கட்சிகள் மொழி, நிலம் பற்றிப் பேசுகின்ற அளவுக்கு பண்பாட்டைக் கருத்தில் கொள்ளுவதில்லை.

பண்பாட்டை உள்வாங்காத தேசியவாதம் முழுமை பெறாது. அதுவும் விடுதலை அரசியலில் பண்பாட்டின் வகிபாகம் மிகவும் இன்றியமையாதது.

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் சுட்டிக்காட்டியுள்ளார்.

பசுமை இயக்கத்தின் ஆடிப்பிறப்பு விழா கடந்த வியாழக்கிழமை நாவற்குழி முத்தமிழ் கிராமத்தில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே பொ. ஐங்கரநேசன் இவ்வாறு சுட்டிக்காட்டியுள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

ஒரு இனத்தின் தனித்துவமான பண்பாட்டின் வெளிப்பாடுகளாகவே விழாக்களும் பண்டிகைகளும் அமைகின்றன. தமிழ் மக்களின் அறிவு ரீதியான காலக்கணிப்பீட்டையும் பகிர்ந்துண்ணும் ஆரோக்கிய உணவுப் பண்பாட்டையும் பறைசாற்றுகின்ற பண்டிகைகளாகத் தைப்பொங்கலும் ஆடிப்பிறப்பும் கொண்டாடப்படுகின்றன.

சூரியன் வடக்கு நோக்கிச் செல்லும் தை முதல் ஆனி வரையான காலப் பகுதி உத்தராயண காலம் எனவும், சூரியன் தெற்கு நோக்கிச் செல்லும் ஆடி முதல் மார்கழி வரையான காலப் பகுதி தட்சணாயண காலம் எனவும் பெயரிடப்பட்டுள்ளன. இவற்றில் உத்தராயண காலத் தொடக்கம் தைப்பொங்கல் ஆகவும், தட்சணாயண காலத் தொடக்கம் ஆடிப் பிறப்பாகவும் கொண்டாடப்படுகிறது.

தைப்பொங்கல் வெகு சிறப்பாகக் கொண்டாடப்படும் அளவுக்கு ஆடிப் பிறப்பு இப்போது கொண்டாடப்படுவதில்லை. ஆடிப் பிறப்புக்கு முக்கியத்துவம் கொடுத்துப் பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கிய காலமொன்றும் இருந்தது. ஆனால், இன்று விடுமுறை இல்லை. 'ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே!' என்ற நவாலியூர் சோமசுந்தரப் புலவரின் பாடல் மாத்திரம்தான் பாடப்படுகின்றது.

தமிழர் தாயகமான வடக்கு, கிழக்கிலாவது கல்வியமைச்சு ஆடிப்பிறப்பு நாளுக்கு விடுமுறையை வழங்கி அதற்கு மாற்றீடாக சனிக்கிழமை ஒன்றில் பாடசாலையை நடாத்துவதற்கு முன்வரவேண்டும். அப்போதுதான் எமது இளைய தலைமுறைக்கு ஆடிப் பிறப்புக் கொண்டாட்டத்தின் முக்கியத்துவம் விளங்கும்.

தமிழ்ப் பண்பாடு ஒருபுறம் சிங்கள பௌத்த மேலாதிக்கத்தாலும் இன்னொருபுறம் உலகமயமாக்கலாலும் அதன் அடையாளத்தை இழந்துகொண்டிருக்கிறது.

இவற்றோடு எமது அக்கறையின்மையாலும் நாம் தொன்று தொட்டுக் கடைப்பிடித்து வந்த பண்பாட்டுவிழுமியங்களும் பாரம்பரிய விழாக்களும் கைவிடப்பட்டுக்கொண்டிருக்கின்றன. ஒருதேசிய இனத்தின் தரத்தை மதிப்பீடு செய்யும் அளவு கோல்களில் அது பேசும் மொழி, அதன் வாழிடம் என்பனவற்றுக்கு நிகராக அதன் தனித்துவமான பண்பாடும் உள்ளது. இதனைத் தமிழ்த்தேசிய அரசியல் தலைமைகள் கருத்தில் எடுத்துப் பண்பாட்டுச் செயற்பாடுகளை மக்களிடையே எடுத்துச்செல்வதற்கு முன்வரவேண்டும்.– என்றார்.



# சமுர்த்தி மூன்று தசாப்த நிறைவை முன்னிட்டு பயனாளிக்கு வீடமைப்பு

சமுர்த்தி திணைக்களத்தின் மூன்று தசாப்த கால நிறைவை முன்னிட்டு தென்மராட்சி பிரதேச செயலக சமுர்த்தி பிரிவினரால் நுணாவில் மத்தி கிராம பிரிவில் அ. பார்த்தீபன் என்பவருக்கு அமைக்கப்பட்ட வீடு நேற்று (18 ) கையளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் பிரதேச சமுர்த்தி அலகின் தலைமையக முகாமையாளர் , பிரதேச செயலக கணக்காளர், வலய சமுர்த்தி முகாமையாளர்கள், வங்கி முகாமையாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.








நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# கொள்கைப் பிறழ்வு

தவறான அரச நிர்வாகம், ஊழல், மோசடி, முறைகேடுகள் போன்றவற்றினால் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியே அறகலய போராட்டத்துக்கு அடிப்படையானது.

இந்தப் போராட்ட சமயத்தில் தொழிலாளர் வர்க்கம் தங்களுடைய எதிர்ப்பைக் காட்டுவதற்கு பயன்படுத்திய பிரதான ஆயுதங்களில் ஒன்று வேலை நிறுத்த நடவடிக்கையாகும்.

அந்தச் சமயத்தில் எதிரணியில் இருந்த தேசிய மக்கள் சக்தி, அப்போது அதிகாரத்திலிருந்த ஆட்சிப் பீடத்தை வீழ்த்தித் தான் அதிகாரத்துக்கு வருவதற்காக, தொழிலாளர் வர்க்கத்தின் வேலை நிறுத்தப் போராட்டங்களுக்கு பின்னால் தூண்டுகோலாக - உந்துசக்தியாக - செயல்பட்டது.

இப்போது அதிகாரத்தைக் கைப்பற்றி, ஆட்சி பீடத்துக்கு வந்ததும் தொழிலாளர் நலனுக்கான வேலை நிறுத்தப் போராட்டங்கள் குறித்து தேசிய மக்கள் சக்தி புதிய வியாக்கியானம் பேசுகின்றது.

எந்தவொரு கோரிக்கையை முன்னிட்டேனும் வேலை நிறுத்தப் போராட்டங்கள் மேற்கொள்ளப்படுவது மிகப் பெரும் தவறு என்று தேசிய மக்கள் சக்தி அரசின் அமைச்சரும், அமைச்சரவைப் பேச்சாளருமான நளிந்த ஜயதிஸ்ஸ விமர்சித்துள்ளார். கொழும்பில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும்போது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

வேலைநிறுத்தப் போராட்டங்கள் காரணமாக இழக்கப்படும் 24 மணி நேரமோ அல்லது 48 மணிநேரமோ அதனை ஈடுசெய்ய அதன் பின்னரான ஒருவாரம் வரை கடுமையாக உழைக்க வேண்டியிருக்கும் என்று அவர் விளக்கம் கூறுகின்றார்.

''அதன் காரணமாக தொழிற்சங்கத் தலைவர்களுக்கு ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகின்றேன். நீங்கள் வீதிக்கு இறங்கி வேலைநிறுத்தம், ஆர்ப்பாட்டம் செய்துவிடுவதால் மாத்திரம் எல்லாவற்றையும் செய்து விட முடியாது. ஒரு சில விடயங்கள் தொடர்பில் நாங்கள் அதனை மேற்கொள்ள திறைசேரியுடன் கலந்துரையாடல்களை நடத்த வேண்டியிருக்கும். அதற்காக குறிப்பிட்ட காலம் எடுக்கும். எனவே வேலைநிறுத்தம் மேற்கொள்வதால் ஒரு சதத்துக்கும் பிரயோசனம் இல்லை'' - என்றும் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ மேலும் தெரிவித்திருக்கின்றார்.

கடந்த காலங்களில் தனியார் துறை மற்றும் அரசு துறைகளில், தொழிலாளர் வர்க்கங்களிடையே ஊடுருவி, தமக்குச் சார்பான தொழிற்சங்கங்களை அங்கெல்லாம் அமைத்து, அவற்றின் ஊடாகப் பெரும் ஆர்ப்பாட்டங்கள், வேலை நிறுத்தங்கள், எதிர்ப்பு நடவடிக்கைகள் போன்றவற்றை முன்னெடுத்து, அவற்றின் மூலம் அந்தந்தக் காலங்களில் இருந்த ஆட்சிப் பீடங்களுக்கு தொல்லையும் தலையிடியும் கொடுத்து, அந்தத் தளத்தின் ஊடாக விருத்தி செய்து கொண்ட மக்கள் ஆதரவைப் பயன்படுத்தியே தேசிய மக்கள் சக்தியினர் இப்போது ஆட்சி பீடத்திற்கு வந்திருக்கிறார்கள். எதிரணியில் இருந்து கொண்டு எடுத்ததற்கெல்லாம் ஆர்ப்பாட்டங்கள், வேலை நிறுத்தங்கள் போன்றவற்றைத் தூண்டி, முன்னெடுத்த அவர்களுக்கு, இப்போது ஆட்சி பீடத்திற்கு - அதிகாரத்திற்கு - வந்ததும் அந்த வேலை நிறுத்தங்கள் வேம்பாய்க் கசக்கின்றன. ஒரு சதத்துக்கும் பிரயோசனம் இல்லாத விவகாரமாக அவை தோன்றுகின்றன.

இது, அதிகார அரசியலினால் எழுந்த கொள்கை வியாக்கியானப் பிறழ்வன்றி வேறில்லை.







# ஞானசாரியர் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் 25 ஆவது ஆண்டு விழா!

ஞானசாரியர் கல்லூரியின் பழைய மாணவர் சங்க 25 ஆவது ஆண்டு விழா வடமராட்சி ஞானசாரியர் கல்லூரியின் பழைய மாணவர் சங்க ஐக்கிய இராச்சியத்தின் கிளையால் கொண்டாடப்பட்டது. இவ்விழா, கல்வி, பண்பாடு மற்றும் சமூக ஒற்றுமையின் மையக் கருத்துக் களைச் சுமந்து, ஈழத் தமிழர் புலம்பெயர் சமூகம் வளர்த்தெடுத்த வரலாற்று நிகழ்வாக பதிவாகியது.

விழாவில் மாணவர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், சமூகத்தினரின் கலந்து கொள்வதோடு மட்டுமல்ல, கலந்துணர்வும், பெருமிதமும் அதிக அளவில் பிரதிபலித்தன.



# கொம்பெடுத்தமடு விவசாய காணிகளை விடுவிக்க உடனடி நடவடிக்கை எடுங்கள்

## தமிழரசுக் கட்சியின் பிரதேச சபை உறுப்பினர் டனுர்சன்

(எஸ்.கீதபொன்கலன்)

குச்சவெளி பிரதேச செயலக எல்லைக்குள் அடாத்தாக வந்த மொரவேவ சிங்களவர்களால் பிடிக்கப்பட்டுள்ள, நீலப்பணிக்கண் விவசாய சம்மேளனத் திற்குட்பட்ட கொம்பெடுத்தமடு விவசாய காணிகளை விடுவிக்க இந்த ஒருங்கிணைப்புக்குழு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இலங்கை தமிழரசுக் கட்சியின் பிரதேச சபை உறுப்பினர் அ.டனுர்சன் தெரிவித்துள்ளார்.

நேற்று (18) நடைபெற்ற குச்சவெளி பிரதேச ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் இந்தக் கோரிக்கையை விடுத்தார். அவர் தொடர்ந்து பேசுகையில்,

திரியாய், கட்டுக்குளம், கல்லம்பத்தை, மருதன்குடா, கல்லறாவ, புடவைக்கட்டு ஆகிய கிராம மக்களின் மருத்துவ சேவையை நிவர்த்திக்கும் திரியாய் ஆரம்பம் சுகாதார வைத்திய நிலையத்தைத் தரமுயர்த்த வேண்டும்.

கல்லம்பத்தை மக்களின் விவசாயத்தை அபிவிருத்தி செய்யும் வகையில் கல்லம்பத்தை அணைக்கட்டு நிரந்தரமாக அமைத்துத்தரப்படவேண்டும்.

பௌத்த பிக்குவால் அபகரிக்கப்பட்டுள்ள ஆத்திக்காடு விவசாயக் காணிகளை உரிய விவசாயிகள் துப்பரவு செய்வதற்கான அனுமதி வழங்கப்படல் வேண்டும் என்ற கோரிக்கைகளையும் அவர் முன்வைத்தார்.

குச்சவெளி பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் வெளிவிவகார மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்ரா தலைமையில் பிரதேச சபையின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.





# மரபிழந்த பாரம்பரிய பண்பாட்டை வெளிப்படுத்தி வவுனியாவில் பண்பாட்டு ஊர்த்திப் பவனிகள்

(கி.வசந்தன்)

மரபிழந்த பாரம்பரிய பண்பாட்டை வெளிப்படுத்தி வவுனியா பிரதேச செயலக பண்பாட்டு விழாவை முன்னிட்டு ஊர்திப் பவனி இடம்பெற்றது.

வவுனியா பிரதேச செயலகம் மற்றும் வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் அலகின் அனுசரணையில் வவுனியா பிரதேச கலாசார பேரவையும், பிரதேச கலாசார அதிகார சபையும் இணைந்து நடத்திய பண்பாட்டு ஊர்திப் பவனி பிரதேச செயலாளர் இ.பிரதாபன் தலைமையில் பிரதேச செயலக முன்றில் நேற்று ஆரம்பமாகி இடம்பெற்றது.

வவுனியா பிரதேச செயலக முன்றில் இருந்து ஆரம்பமாகிய ஊர்திப் பவனி தமிழர் பாரம்பரியம், கலாசாரம், வரலாறு, தொல்லியல், கலைகள் என்பவற்றை பறைசாற்றிக் கிராம மக்களின் பங்களிப்புடன் வவுனியா, கண்டி வீதியை அடைந்து பசார் வீதி, மணிக்கூட்டு கோபுர சந்தி, ரயில் நிலைய வீதி, குருமன்காடு, மன்னார் வீதி ஊடாக சென்று பிரதேச செயலகம் முன்பாக நிறைவடைந்தது.

இதில் தமிழர் வாழ்வியலின் பாரம்பரியத்துடன் தொடர்புடைய விவசாய முறைகள், நீர்பாசன முறைகள், உணவு தயாரித்தல், கைவினை உற்பத்திகள், வழிபாட்டு முறைகள், சடங்கு முறைகள், கிராமிய கலை மரபுகள், கிராமிய உணவு பழக்கவழக்கம் உள்ளிட்டு பல்வேறு அம்சங்களை தாங்கிய 47 இற்கும் மேற்பட்ட ஊர்திகள் இதன் போது பவனி வந்திருந்தன.

இந்த நிகழ்வில் வடமகாண கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் பற்றிக் நிரஞ்சன், வவுனியா அரச அதிபர் பீ.ஏ.சரத் சந்திர, மேலதிக அரசாங்க அதிபர் நா.கமலதாசன், வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் த.முகுந்தன், வவுனியா தெற்கு வலய பிரதி கல்விப் பணப்பாளர் அமல் ராஜ், அரச அதிகாரிகள், அரச உத்தியோகத்தர்கள், மதகுருமார், சமூக மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள், சமயம் சார் அமைப்புக்கள், கிராமிய மக்கள் எனப் பலரும் இதில் கலந்து கொண்டனர்.













# பொத்துவில் ஆதார வைத்தியசாலையில் சிறுபிள்ளை வைத்திய நிபுணரின் சேவை!

(ஆதம்)

பொத்துவில் ஆதார வைத்தியசாலையில் ஒவ்வொரு வாரமும் செவ்வாய் மற்றும் புதன் ஆகிய தினங்களில் சிறுபிள்ளை வைத்திய நிபுணரின் சேவையைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று வைத்தியசாலை அபிவிருத்திக் குழுவின் தலைவரும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்க கல்முனைக் கிளையின் செயலாளருமான டாக்டர் உவைஸ் பாறுக் தெரிவித்தார்.

வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் நிதின் ரனவக்கவுடன் இணைந்து தொடர்ச்சியாக மேற்கொண்ட முயற்சியின் பயனாக அம்பாறை, மாவட்ட பொது வைத்தியசாலையின் சிறுபிள்ளை வைத்திய நிபுணர் டாக்டர் தனுஷியா சிவலிங்கம் வாரத்தில் இரு தினங்கள் பொத்துவில் வைத்தியசாலைக்கு வருகை தந்து சேவையாற்றுவதற்கு முன்வந்துள்ளார்.

கடந்த 15 ஆம் திகதி முதல் சிறுபிள்ளைகளுக்கான விசேட வைத்திய நிபுணரின் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டு இன்றுவரை இடம்பெற்று வருகிறது.

அந்தவகையில் வாரத்தில் இரு தினங்கள் இந்த சேவையைப் பெற்றுக் கொள்ள முடியும். எதிர்வரும் காலங்களில் ஏனைய விசேட வைத்திய நிபுணர்களின் சேவைகளும் இந்த பிரதேச மக்களுக்கு பெற்றுக்கொடுக்கப்படும். அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

அந்த வகையில் எமது கோரிக்கைகளை ஏற்று எமது பிரதேச மக்களுக்காக சேவையாற்றுவதற்கு முன்வந்த சிறுபிள்ளை வைத்திய நிபுணர் டாக்டர் தனுஷியா சிவலிங்கம் மற்றும் அற்காக உதவி ஒத்துழைப்புக்களை வழங்கிய அம்பாறை மாவட்ட பொது வைத்திய சாலையின் பணிப்பாளர் டாக்டர் சந்திரசேன, வைத்திய அத்தியட்சகர் டாக்டர் நிதின் ரனவக்க ஆகியோருக்கு பொத்துவில் பிரதேச மக்கள் சார்பில் நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# சந்நிதியான் ஆச்சிரமத்தில் அருளுரையும், கௌரவிப்பும்





சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில், ஆச்சிரம முதல்வர் சாதனைத் தமிழன் மோகனதாஸ் சுவாமிகள் அவர்களின் தலைமையில், ஆச்சிரமத்தின் வாராந்த நிகழ்வாக, ஆன்மீக அருளுரையாக மகாபாரதம் என்ற தொடர் சொற்பொழிவை ஆசிரியர் இரா.செல்வவடிவேல் நிகழ்த்தினார்.

கௌரவிப்பு நிகழ்வாக, திருகோணமலை, உதயபுரி, செல்வநாயகபுரம் முத்துகுமார சுவாமி திருக்கோவில் ஆலய நிர்வாகத்தினரால் ஆச்சிரம முதல்வர் சாதனைத் தமிழன் மோகனதாஸ் சுவாமிகள் அறப் பணிகளுக்காக நினைவுச் சின்னம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

இந்த ஆலயத்துக்கு அறநெறிப் பாடசாலைக்கான புதிய கட்டடமும் ஆலயத்தின் கட்டட கட்டுமானப் பணிகளுக்கான நிதி உதவிகளும் ஆச்சிரமத்தால் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

நிகழ்வுகள் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றன.



# தம்பலகாமத்தில் பிரதேச ஒருங்கிணைப்பு குழு கூட்டம்

(ஹஸ்பர் ஏ.எச்.)

தம்பலகாமம் பிரதேச ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் நேற்று (18) தம்பலகாமம் பிரதேச செயலக மண்டபத்தில் பிரதேச செயலாளர் திருமதி ஜெ.ஸ்ரீதி ஒருங்கமைப்பிலும், வெளி விவகார வெளிநாட்டு வேலை வாய்ப்பு பிரதியமைச்சரும், திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்தி குழு தலைவருமான அருண் கேமசந்திர தலைமையில் இடம் பெற்றது.

குறித்த கூட்டத்தில் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப், தம்பலகாமம் பிரதேச சபை தவிசாளர் எச். தாலிப் அலி மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள், அரச திணைக்கள தலைவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

தம்பலகமம் பிரதேச செயலகப் பகுதியில் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்தி திட்டங்கள், மக்கள் பிரச்சினைகள் என பலதும் கலந்துரையாடப்பட்டது.



கடவானை அட்டவானை மேய்ச்சல் தரை பிரச்சினை, யானை மனித மோதல் முரண்பாடு ஊடான குப்பை மேட்டு பிரச்சினை தொடர்பில் பேசப்பட்டது.

அனர்த்த காலங்களில் அதிகமாக முள்ளிப்பொத்தானை ஜாமியா நகர், பாலம் போட்டாறு பகுதிகள் பாதிக்கப்படுகின்றன என்ற நிலையில் இதற்கான நிரந்தர தீர்வைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

தம்பலகாமம் பிரதேச செயலகப் பகுதிக்கான தனியான கல்வி வலயம் ஒன்றை உருவாக்குவது தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தனது பிரேரனையில் முன் வைத்தார்.

குளங்களின் புனரமைப்பு , வீதி அபிவிருத்தி, வனஜீவராசிகள் திணைக்களம் ஊடான தீர்வு, விவசாய செய்கை விரிவாக்கம் தொடர்பிலும் சிராஜ் நகர் சேனாவெளி குளப் பிரதேசத்தை சுற்றுலா பகுதியாக அபிவிருத்தி செய்வது தொடர்பிலும் இங்கு கலந்துரையாடப்பட்டன.






# தமிழ்நாடு இலக்கிய படைப்பாளியால் யாழ். நூலகத்துக்குப் புத்தகம் வழங்கல்

தமிழ்நாடு அரசிடம் சிறந்த நூல்களுக்கான பரிசுகள் பெற்ற பிரபல இலக்கிய படைப்பாளி கலைமாமணி ஏர்வாடி எஸ். இராதாகிருஷ்ணன், தான் எழுதிய இலக்கிய நூல்களின் ஒரு தொகுதியை யாழ். நூலகத்தின் பிரதம நூலகரிடம் அன்பளிப்புச் செய்துள்ளார்.

இந்த நிகழ்வு வியாழக்கிழமை இடம்பெற்றது. இதன் ஆரம்ப நிகழ்வாக, திருமலை எஸ்.கே. நடேசபிள்ளை, யாழ். இந்திய துணைத் தூதுவர் சாயி முரளியிடம் நூல்களை அறிமுகம் செய்து வைத்தனர்.விழா அமைப்பாளரும் தொழிலதிபருமான வீ. ஆர். தொண்டமநாபனை படைப்பாளி கௌரவித்தார்.

# செம்மணி புதைகுழிக்கு சர்வதேச நீதி கோரி ஆஸ்திரேலிய தலைநகர் கன்பராவில் பேரணி !

(நவீனன்)

செம்மணி புதைகுழிகளில் இருந்து ஆதாரங்கள் மீண்டும் வெளிவந்ததைத் தொடர்ந்து, ஈழத்தில் நடந்து வரும் இனப்படுகொலைக்கு சர்வதேச பொறுப்புக்கூறலைக் கோரி, அனைத்து ஈழத் தமிழ் ஆஸ்திரேலிய அமைப்புகளும் எதிர்வரும் 21 ஆம் திகதி மதியம் 12 மணிக்கு கன்பராவில் பேரணி நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இந்தப் பேரணி இலங்கைத் தூதரகத்துக்கு வெளியே தொடங்கி ஆஸ்திரேலியாவில் உள்ள ஐக்கிய நாடுகள் சபை அலுவலகங்கள் உட்பட முக்கிய தூதரகங்களை நோக்கிச் செல்லவுள்ளது.

1996 ஆம் ஆண்டு முதன் முதலில் அம்பலப்படுத்தப்பட்ட செம்மணி புதைகுழிகள், 1990 களின் பிற்பகுதியில் இலங்கை இராணுவத்தால் நீதிக்குப் புறம்பாக கொல்லப்பட்ட தமிழ் பொது மக்களின் ஆதாரங்களைக் கொண்டுள்ளன என்று போர்த்து மூடப்பட்டன.

தற்போது புதுப்பிக்கப்பட்ட அகழ்வாராய்ச்சிகள் மற்றும் நேரில் கண்ட சாட்சியங்கள், நூற்றுக் கணக்கான உடல்கள் கண்டுபிடிக்கப்படாமலும், கணக்கில் வராமலும் இருக்கலாம் என்பதை வெளிப்படுத்தியுள்ளன.

பின்னர், 2025 ஆம் ஆண்டில் சமீபத்திய விசாரணைகள் மற்றும் பொது அறிக்கைகள் சர்வதேச தடயவியல் தலையீட்டுக்கான அழைப்புகளை மீண்டும் எழுப்பியுள்ளன. இந்த புதைகுழிகள் கடந்த காலத்தின் நினைவுச் சின்னங்கள் அல்ல. அவை நடந்து கொண்டிருக்கும் மற்றும் முறை யாக மறுக்கப்படும் ஒரு இனப்படு கொலையின் மறுக்க முடியாத சான்றுகளாகும்.




இவ்வாறான விடயங்களை இந்தப் பேரணி சர்வதேச சமூகத்தின் கவனத்துக்குக் கொண்டு செல்ல முயல்கிறது.

தமிழ் இளைஞர்கள், உயிர் பிழைத்தவர்கள் மற்றும் மனித உரிமைகள் ஆதரவாளர்கள், வெளிநாட்டு தூதரகங்கள் மற்றும் ஐ.நாவுக்குத் தங்கள் ஆதாரங்களை வழங்குவார்கள்.

இது நடந்த இராணுவ அட்டூழியங்களின் அளவையும் உலகளாவிய பொறுப்புக் கூறலுக்கான அவசரத் தேவையையும் கோடிட்டுக் காட்டும்.

ஈழத் தமிழர்களின் இனப்படுகொலையை ஒப்புக்கொள்ளுங்கள், செம்மணி புதைகுழிகள் மற்றும் பிற அட்டூழிய தளங்கள் குறித்து சுயாதீனமான சர்வதேச விசாரணைகளை இலங்கை அனுமதிக்க வேண்டும்.

அத்துடன் போர்க் குற்றவாளிகளை நீதியிலிருந்து காப்பாற்றிய இலங்கையின் உள் "நல்லிணக்க" வழிமுறைகளுக்கு ஆதரவளிப்பதை நிறுத்துங்கள். மேலும் சுயநிர்ணய உரிமை மற்றும் அவர்களின் தாயகத்தைப் பாதுகாக்க தமிழர்கள் அழைப்பு விடுப்பதை ஆதரியுங்கள் என்று இந்த பேரணி ஏற்பாட்டாளர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

அத்துடன் விக்டோரிய மாநிலத்திலும் எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஓர் கவனவீர்ப்புப் போராட்டம் நடைபெறவுள்ளது.

# பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்களுக்கான பயிற்சிச் செயலமர்வு மாவட்ட செயலகத்தில்






பாடசாலை மாணவர் தூதுவர் தேசிய நிகழ்ச்சித் திட்டத்தில் பதிவு செய்யப்பட்ட பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்ளுக்கான பயிற்சி செயலமர்வு மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் அவர்களின் தலைமையில் நேற்று (18) மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

அரச அதிபர் தனது தலைமையுரையில்,

செயலமர்வின் நோக்கமானது பாடசாலைகளில் மாணவர்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளை விலங்கி, அவர்களை எவ்வாறு ஆற்றுப்படுத்துவது என்பது தான். அவர்களை உள நெருக்கடிகளிலிருந்து பாதுகாப்பதும் அனைவரினதும் பொறுப்பாகும் எனவும் தெரிவித்தார்.

அதிபர், ஆசிரியர்கள் மாணவர்களை எவ்வாறு கையாள்வது என்பதிலும் சூழலை ஆரோக்கியமாக பேணுவதிலும் கவனம் செலுத்த வேண்டும் என்றும் அரச அதிபர் கேட்டுக்கொண்டார்.

செயலமர்வில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் உள மருத்துவ நிபுணர் வைத்திய கலாநிதி எஸ். சிவதாஸ், மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிராந்திய ஆணையாளர் ரி. கனகராஜ் மற்றும் பிரதேச சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் இ. ரவிராஜ் ஆகியயோர் வளவாளர்களாக கலந்து கொண்டனர்.

செயலமர்வில் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாவட்ட மற்றும் பிரதேச சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.



# ஞாயிறு மற்றும் போயா தினத்தில் தனியார் வகுப்பு நடத்த தடைவிதிப்பு!

## மட்டக்களப்பு மாநகரசபை கொண்டுவரப்பட்ட 13 பிரேரணைகள் சபையில் நிறைவேற்றம்

(மாமாங்கம் நிருபர் )

மட்டக்களப்பு மாநகரசபை எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் ஞாயிறு மற்றும் போயா தினங்களில் தனியார் வகுப்புக்கள் நடத்த தடை விதிப்பு, விளம்பர பலகைகள் தமிழ் மொழி கட்டாயம் பொறிக்கப்படல், கட்டாக்காலி மாடுகள், நாய்கள் கட்டுப்படுத்தல் உட்பட 13 பிரேரணைகள் நேற்று முன்தினம் வியாழக்கிழமை (17) இடம்பெற்ற மாநகர சபை அமர்வில் நிறைவேற்றப் பட்டுள்ளது.

மாநகரசபையின் 8 ஆவது சபையின் இரண்டாவது சபை அமர்வு நேற்று முன்தினம் வியாழக்கிழமை (17) மாநகரசபை முதல்வர் சிவம் பாக்கியநாதன் தலைமையில் சபை சபா மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன்போது மாநகர சபை எல்லைக்கு உட்பட்ட பிரதேசங்களிலுள்ள தனியார் கல்வி நிலையங்களில் இடம் பெற்றுவரும் பிரத்தியோக வகுப்புக்களை ஞாயிறு மற்றும் போயா தினங்களில் சட்டரீதியாக தடை செய்ய வேண்டும் என சபை உறுப்பினர் தயாளராசா தரணிராஜ் பிரேரணையை கொண்டு வந்தார்.

அதனை தொடர்ந்து உறுப்பினர் துரைசிங்கம் மதன் செம்மணி புதைகுழி படுகொலையை கண்டித்து அதனை சர்வதேச கண்காணிப்புடன் அரசு விசாரணை செய்யவேண்டும் எனவும் மாநகரசபையின் சரியான எல்லையை உறுதிப்படுத்தி எல்லையில் வரவேற்பு கோபுரங்கள் அமைக்கப்பட வேண்டும் என்ற பிரேரணைகளை முன்வைத்தார்.

மாநகர சபை எல்லைக்கு உட்பட்ட பிரதேசங்களில் உள்ள வர்த்தக நிலையங்கள் மற்றும் இரத காட்சிப்படுத்தப்படும் விளம்பர பலகையில் முதலில் தமிழ் மொழி கட்டாயம் இருக்கவேண்டும் என்ற பிரேரணையை உறுப்பினர் வைரமுத்து தினேஸ்குமார் கொண்டு வந்தார்.

அதனை தொடர்ந்து உறுப்பினர் திருமதி தயாளகுமார் கௌரி, வீதிகளில் உலாவும் கட்டாக்காலி நாய்கள் மற்றும் மாடுகளால் வீதி விபத்துக்கள் அதிகரித்துள்ளன. எனவே இந்த கட்டாக்கலி மாடுகள், நாய்களை கட்டப்படுத்துமாறும் திராய்மடு, நாவற்கேணி ரயில் கடவையில் நிரந்தரமாக கடவைக் காப்பாளர்களை நியமிக்குமாறு ரயில்வே திணைக்களத்தை வலியுறுத்துமாறு பிரேரணையை கொண்டு வந்தார்.

இதனையடுத்து உறுப்பினர் கருணாநிதி ஜனகன் மாநகர சபைக்கு உட்பட்ட அனைத்து பூங்காக்களுக்கும் பாதுகாப்பு உத்தியோகத்தரை நியமிக்குமாறும் கொண்டுவந்தார்.

வீதி விபத்துக்களைத் தடுப்பதற்கான பிரேரணையை உறுப்பினர் செல்வராசா குமார் கொண்டு வந்தார்.

திருப்பெரும்துறை சேத்துக்குடா பகுதிகளில் உள்ள விபுலானந்தா வீதி மற்றும் விநாயகர் வீதி ஆகிய இரு வீதிகளையும் ஒரு வழிப் பாதையாக மாற்றுமாறு மாசிலாமணி சண்முகலிங்கம் பிரேரணையைச் சபையில் முன்வைத்தார்.

அதேவேளை, மாநகர சபை முதல்வர் கள்ளியங்காடு மயானத்துக்கு அருகில் கொழும்பு பொரளையில் உள்ள மலர்சாலைகள் போன்று ஒரு மலர்சாலையை மரக்கூட்டுத்தாபன பகுதியில் அமைக்க அரசகாணியை பெறுவதற்கான ஒரு பிரேரணையை கொண்டுவந்தார்.

மாநகரசபைக்கு உட்பட்ட பகுதிகளில் இடம்பெற்றுவரும் வீதி வியாபாரத்தில் தடை செய்து அதற்கு ஒரு தீர்வு காண்பதற்காக பெண் உறுப்பினர் ஒருவர் உட்பட 5 பேர் கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட்டு உறுப்பினர்களால் கொண்டுவரப்பட்ட அனைத்து பிரேரணைகளும் சபை குழுநிலைவிவாதத்துக்கு விடப்பட்டு அவைகள் முன்மொழிந்து வழிமொழியப்பட்டு நிறைவேற்றப்பட்டன.





# உரிமைஇல்லாத வாழ்வு: மலையகத் தமிழர் சாகசம்!

மலையக மக்களின் அடிப்படை உரிமைகளில் காணி உரிமையும் முக்கியமான ஒன்றாகும். நீண்ட காலமாகவே நிலத்துக்கான உரிமையற்ற ஒரு சமூகமாக இருப்பதோடு எமது தலைமுறைக்கே நில உரிமை என்பது மறுக்கப்பட்ட இருளாகவே காணப்படுகின்றது. அதற்கான வெளிச்சம் இதுவரையிலும் எட்டப்படவில்லை என்பதே நிதர்சனமான உண்மை.

மனிதர்கள் காலடி படாத காடுகளை அழித்து அதில் பெருந்தோட்டங்களை உருவாக்கி இந்த நாட்டின் பொருளாதாரத்துக்கு உழைப்பை வழங்கிய எம் மக்களின் வழித்தோன்றல்களுக்கு அடிப்படையான காணி உரிமை என்பது மறுக்கப்பட்ட ஒன்றாகவே காணப்படுகின்றது.

உண்மையிலேயே இது நீதியானதா ஏன்? எதற்கான நீதியை நிலைநாட்ட அரசுகளும் பெருந்தோட்டக் கம்பெனிகளும் முன்வருவதில்லை என்பது கேள்விக்குரிய விடயமாகும்.

மலையகத் தமிழர்கள் இலங்கையின் மலைப் பகுதிகளில் வாழும் ஒரு உழைப்புப் பிரஜைகள். பிரிட்டிஸ் காலத்தில் இந்தியாவில் இருந்து கொண்டு வரப்பட்ட இவர்களுக்கான நில உரிமைகள், அடிப்படை வசதிகள், கல்வி, அரசியல் உரிமைகள் என பல அம்சங்களில் இன்னும் மிகப்பெரிய பின்தங்கிய நிலை உள்ளது.

இன்று கூட, தாய் நிலமின்றி தவிக்கும் இந்த மக்களின் வாழ்க்கை பல்லாயிரம் சவால்களால் நிரம்பியுள்ளது.

மக்கள் அவர்களுக்கான காணி உரிமையை பெற்றுக் கொள்வதற்கு பல்வேறு போராட்டங்களை அன்றாட மேற்கொண்டு தான் இருக்கிறார்கள். ஆனாலும் இன்றுவரை தீர்வு காண முடியாத தன்மையிலே காணப்படுகின்றது. காணி உரிமைக்கான முதலாவது போராட்டம் 1946 ஆம் ஆண்டு ஜுலை 9 ஆம் மலையக மக்களின் முதலாவது காணிக்கான போராட்டமாகக் கேகாலையின் உருவள்ளி பெருந்தோட்டத்தில் முன்னெடுக்கப்பட்டது.

அந்தப் பெருந்தோட்டத்தில் அம்மக்களின் 400 ஏக்கர் குடியிருப்பு நிலம் அரசால் பறிமுதல் செய்யப் பட்டதைத் தொடர்ந்து தமது காணிகளைப் பாதுகாக்க முன்னெடுக்கப்பட்ட போராட்டமாக அது அமைந்திருந்தது.

இலங்கைப் பெருந்தோட்டங்களில் உள்ள இந்திய வம்சாவளித் தொழிலாளர்களின் காணி உரிமைகளைக் கோரி இலங்கை இந்திய காங்கிரஸ் தொழிற்சங்க சம்மேளத்தால் முன்னெடுக்கப்பட்ட இப்போராட்டத்தில் கேகாலை மற்றும் களனிப் பள்ளத்தாக்கு பிரதேசங்களைச் சேர்ந்த 125,000 இற்கும் அதிகமான மக்கள் பங்கேற்றிருந்தனர்.

1972 ஆம் ஆண்டின் காணிச் சீர்திருத்தச் சட்டம் குடியேற்றங்கள் உருவாகவும் காணிக் கையகப்படுத்தல்கள் நிகழவும் வழிவகுத்தது. தொடர்ச்சியான காணிக் கையகப்படுத்தல்கள் போராட்டங்களுக்கு வழிவகுத்தன.

டெவோன் தோட்டத்தின் 7000 ஏக்கர் நிலத்தை கையகப்படுத்த மேற்கொள்ளப்பட்ட முயற்சிக்கு எதிராக மே 11.1977 அன்று முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் போது சிவானு லட்சுமணன் என்ற இளம் தோட்டத் தொழிலாளி பொலிஸாரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

அதன் விளைவாகப் பெருந்தோட்ட நிலங்களைப் பறிமுதல் செய்யும் திட்டம் கைவிடப்பட்டது. அதே போன்று 2000 ஆம் ஆண்டில் மேல் கொத்மலை நீர் மின்சார திட்டத்துக்காக அப்பிரதேச மக்களை வெளியேற்றும் முன்னெடுப்பு தொடர்ச்சியான மக்கள் போராட்டம் காரணமாக கைவிடப்பட்டது.

2014 ஆம் ஆண்டு பதுளை மாவட்டத்தின் ஹபுத்தளை பிரதேசத்தில் மேரியாவத்த பகுதியில் இடம்பெற்ற நிலச்சரிவு பேரழிவின் பின்னர் மலைநாட்டில் வாழும் மக்களுக்கு குடியிருப்புக்குப் பொருத்தமான இடங்கள் வழங்கப்பட வேண்டும் என்ற வரலாற்றுச் சிறப்பு மிக்க கோரிக்கை நாட்டின் அனைத்து பாகங்களில் இருந்தும் முன்வைக்கப்பட்டது.



நிசன்குமார் கோபிநாத்
முதலாம் வருடம்,
கலைப்பீடம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

காணி உரிமைகள் மற்றும் ஏனைய உரிமைகளுக்காக முன்னெடுக்கப்பட்ட போராட்டங்களில் எமது முன்னோர்கள் மேற்கொண்ட தியாகங்கள் அளப்பரியன.

மலையக மக்களின் காணி உரிமைக்கான அங்கீகா ரத்தை பாதுகாக்க பல ஆர்ப் பாட்டங்கள் மற்றும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ள போதும் அவர்களின் பிரச்சினைகள் இன்னும் தீர்க்கப்படாமல் உள்ளதுடன் அவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் மீறல்கள் தொடர்ந்த வண்மேயுள்ளன.

எனவே, இந்தக் கோரிக்கை நாட்டின் தேசிய உரையாடலில் உள்ளடக்கப்படும் ஒரு தேவை தற்போது எழுந்துள்ளது.

மேலும் மலையக மக்களுக்கு பெருந்தோட்ட காணிகளை வழங்குவதற்கு மாத்திரம் பெருந்தோட்ட கம்பெனிகளுக்கும் அரச நிறுவனங்களுக்கும் இடையே காணப்படுகின்ற குத்தகை ஒப்பந்தம் காரணமாக காணி உரிமை மறுக்கப்பட்டு வருகின்றது. அத்தோடு பெருந்தோட்ட கம்பெனிகளுடன் எவ்வித தொடர்புமற்ற காணி சீர்திருத்த ஆணைக்குழு , துநுனுடீஇ ளுடுளீஊஇ வுசுஜ ஆகிய அரச நிறுவனங்கள் மற்றும் பெருந்தோட்ட அமைச்சின் கட்டுப்பாட்டில் உள்ள பெருந்தோட்ட காணிகளை அவற்றில் வாழும் மலையக மக்களுக்கு குடியிருப்பு தேவைக்காக அனுமதிப்பத்திரம் அழைப்பு பத்திரம் அளிப்பு பத்திரம் அறுதியீட்டு உறுதி ஊடாக வழங்குவதற்கு இதுவரையில் எந்த ஒரு முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை என்பதே உண்மையாகும்.

எமது நாட்டில் பிரஜைகளுக்காக குடியேற்ற திட்டங்கள் உருவாக்கப்பட்டு புதிய கிராமங்கள் அமைக்கப்படும் போது ஏனைய எல்லா காரணிகளுக்கு அப்பால் பிரஜைகளின் குடும்ப பாதுகாப்பு நலன், பொருளாதார சுபிட்சம் என்பவற்றுக்கே முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு அத்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

எனினும் மலையக மக்களுக்கு குடியிருப்புக்காக காணி வழங்கப்படும் பொழுது மாத்திரம் நம் மக்களின் உழைப்பால் உருவாக்கப்பட்ட தேயிலைச் செடிகளுக்கும் றப்பர் மரங்களுக்கும் அம்மக்களை விட அதிக மதிப்பு வழங்கப்பட்டு தேயிலைச் செடிகளையும் றப்பர் மரங்களையும் காப்பாற்றுவதாக கூறி அவர்கள் தொடர்ந்து லயங்களிலே வாழ்வது உறுதி செய்யப்படுகின்றது.

இலங்கையில் வாழும் எல்லாப் பிரஜைகளுக்கும் அரசு காணி வழங்கவில்லை என்பது உண்மையென்ற போதும் தனது சொந்த வருமானத்தில் கொள்வனவு செய்ய முடியாத ஏக பெரும்பான்மை பிரதிகளுக்கு காணி வழங்கி அவர்களின் நில உரிமையும் இருப்பையும் அரசு உறுதி செய்துள்ளது. தொடர்ந்து செய்யப்பட்டு வருகின்றது.

எனினும் வரலாறு நெடுகிலும் ஏறத்தாழ மலையக மக்கள் அனைவருக்கும் காணி உரிமை மறுக்கப்பட்டமையால் அவர்கள் அதன் காரணமாக மிக அடிப்படை உரிமையான முகவரியை கூட பெற்றுக் கொள்ள முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

ஆரம்பத்தில் தோட்டச் சொந்தக்காரர்களாக இருந்தவர்கள் வழங்கிய முகவரியை மலையக மக்கள்

தொடர்ச்சி▼

# உரிமைஇல்லாத வாழ்வு: மலையகத் தமிழர் சாகசம்!

**தொடர்ச்சி▲**

சுமந்து கொண்டிருக்கின்றனர் என்பதே நிதர்சனமான உண்மை.

எனவே பல்கலைக்கழக மாணவர்கள் ஆகிய எங்களுக்கும் எங்களுடைய சமுதாயத்துகடகான விடிவை பெற்றுக் கொள்வதற்கான ஒரு கடமைப்பாடு உள்ளது. ஆகவே எங்கள் தலைமுறையின் அடிப்படை நிலப் பிரச்சினைகளை காண தீர்வுகளை எட்டப்பட வேண்டிய சூழ்நிலை இன்று காணப்படுகின்றது.

மலையக சமூகங்களின் காணி உரிமைகளை உறுதி செய்வதற்காகவும் காணியற்றவர்களுக்காக காணிகளைக் கோருவதற்காக ஒத்த சிந்தனையுள்ளவர்களை ஒன்று திரட்டவும் ஒரு தேசிய தினம் பிரகடனப் படுத்தப்பட வேண்டும் என மலையக மக்களின் காணி உரிமைக்கான இயக்கம் (ஆீடுசு) நீண்ட காலமாக கோரி வருகின்றது.

மலையக மக்களின் காணி பிரச்சினை இன்னும் ஒரு கொள்கை ரீதியில் தேசிய வேலைத் திட்டத்துடன் முன்னெடுக்கப்படாத நிலையில், தற்போது அதற்கான அழுத்தங்கள் பாரியளவில் எழுந்திருப்பது முக்கியமான விடமாகும். அந்த வகையில் மலையக மக்களுடைய காணிக்கான போராட்டமும் அதன் வரலாறும் மிக பழமை வாய்ந்ததாக உள்ளது. மலையக மக்களுடைய காணிக்கான போராட்டம் இந்த நாடு சுதந்திரம் பெறுவதற்கு முன்பதாகவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அது வரலாற்று மற்றும் சரித்திரமிக்க போராட்டம் என்பது தற்போது வெளிக் கொண்டு வரப்பட்டு அதனை மையமாக கொண்டு 2022 ஆம் ஆண்டு மலையக மக்களின் காணி உரிமைக்கான இயக்கம் ஒரு காணி தினத்தை பிரகடனப்படுத்தியது.




# புதுக்குடியிருப்பில் காணி அற்றோருக்கு உடனடியாகக் கால் ஏக்கர் காணி!

## ரவிகரன் எம்.பியின் கோரிக்கையை அடுத்து என்கிறார் பிரதேச செயலாளர் தெரிவிப்பு

(விஜயரத்தினம் சரவணன்)

புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள 1500 காணியற்றோருக்கும் உடனடியாக காணிகளை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் வலியுறுத்தியுள்ளார்.

இந்த நிலையில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட காணி அற்றோருக்கு திம்பிலிப் பகுதியில் கால் ஏக்கர் வீதம் கணியைப் பகிர்ந்து வழங்குவதற்கு தம்மால் நடவடிக்கை எடுக்கப்படும் என்று புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டம் நேற்று இடம்பெற்றது. குறித்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலேயே இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் கருத்துத் தெரிவிக்கையில்,



ஏனைய மாவட்டங்களைப் பொறுத்தவரை காணியற்றோர் மிகவும் குறைவாகக் காணப்படுகின்றனர். ஆனால் முல்லைத்தீவு மாவட்டத்தில் காணியற்றோர் மிகவும் அதிகளவில் காணப்படுகின்றனர். குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டத்தில் 3 ஆயிரத்து 389 பேர் காணியற்றவர்களாகக் காணப்படுகின்றனர் என்று புள்ளி விவரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

அதிலும் குறிப்பாப் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் காணியற்றோராக 1500 பேர் காணப்படுகின்றனர் என்றும் பிரதேச செயலகப் புள்ளி விவரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

இந்த நிலையில் காணியற்றவர்கள் பலத்த இடர்பாடுகளுக்கு முகங்கொடுத்து வருகின்றனர். எனவே புதுக்குடியிருப்பில் இருக்கின்ற இந்த காணியற்ற மக்களுக்கு காணிகளை வழங்க உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென வலியுறுத்திக் கேட்டுக் கொள்கின்றேன். - என்றார்.

இந்நிலையில் புதுக்குடியிருப்புப் பிரதேசசெயலாளர் இதற்கு பதிலளிக்கையில்,

புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட திம்பிலிப் பகுதியிலுள்ள அரசகாணிகள் அளவீடு செய்யப்பட்டு காணியற்றோருக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தார்.

அதனடிப்படையில் புதுக்குடியிருப்பு பிரதேசசெயலர் பிரிவிலுள்ள காணியற்றவர்களுக்கு திம்பிலிப் பகுதியில் 0.25 ஏக்கர் வீதம் காணிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.- என்றார்.



# மரக் கிளை முறிந்து வீழ்ந்ததால் ஒருவர் சம்பவ இடத்தில் உயிரிழப்பு

(மஸ்கெலியா )

கடும் காற்றால் மரக் கிளை முறிந்து வீழ்ந்ததால் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் இன்று (19) காலை மஸ்கெலியா பொலிஸ் பிரிவில் மற்ற உள்ள புரவுன்சீக் தோட்ட மோட்டீங்ஹேம் பிரிவில் இடம் பெற்றுள்ளது.

மூன்று குழந்தைகளின் தந்தையான ராசமாணிக்கம் செல்வகுமார் (வயது 44) என்பவர் விறகு சேகரிக்கும் பணியில் ஈடுபட்டு வந்த போது இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

கருப்பன்தைல மரக் கிளை முறிந்து வீழ்ந்தால் இந்த அனர்த்தம் நிகழ்ந்துள்ளது.

மஸ்கெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு சடலம் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மஸ்கெலியா பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.




# புல்மோட்டை மீனவர்களின் பிரதான தொழிலான கட்டுவலை தொழிலுக்கு உரிய அனுமதி வழங்குக!

## பிரதேச ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் இம்ரான் எம்.பி. கோரிக்கை

(ஏ.ஏச்.ஹஸ்பர்)

புல்மோட்டை பிரதேச மீனவர்களின் பிரதான தொழிலான கட்டுவலை தொழிலுக்கு உரிய அனுமதியை வழங்க வேண்டும் என்று திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்தார்.

குச்சவெளியில் நேற்று (18) இடம்பெற்ற பிரதேச ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தின் போதே இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்தும் தனது பிரேரணைகளை முன்வைத்தார்.



குச்சவெளி ஜாயா நகர் பிரதேசத்தில் பொதுவிளையாட்டு மைதானம் ஒன்று அமைப்பது, றைகம் உப்பு தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படும் உப்பை இந்தப் பகுதியில் கருவாட்டு உற்பத்தியில் ஈடுபடுபவர்களுக்கும் வழங்குவது, குச்சவெளி பிரதேச மீனவர்களுக்கு சுருக்குவலை அனுமதி வழங்குவது, சுனாமியினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு 2006 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட வீட்டுத்திட்டத்தில் குடியிருக்கும் பயனாளிகளுக்கு இதுவரை எவ்வித ஆவணங்களும் வழங்கப்படவில்லை, அவர்களுக்கு உரிய ஆவணங்களை விரைவாக வழங்குவது சம்பந்தமாகப் பிரேரணைகள் முன்வைக்கப்பட்டன.

புடவைக்கட்டு பிரதேசத்திலுள்ள மீனவர்கள் கடலுக்குச் செல்லும் பொழுதும், கடலிலிருந்து கரைக்கு திரும்பும் பொழுதும் கடற்படையினரின் இறங்கு துறைக்கு சென்று படகுளை சோதனை செய்துவிட்டே செல்ல அனுமதிக்கப்படுகின்றனர். இக்கெடுபிடி காரணமாக மீனவர்கள் பல சிரமங்களுக்கு முகம் கொடுக்கின்றனர். புடவைக்கட்டு பிரதேசத்தில் மீனவர்களின் படகுகள் சோதனை செய்யும் நடவடிக்கைளை நிறுத்த வேண்டும்.

புடவைக்கட்டு பிரதேசத்தில் முன்னர் பாடசாலை அமைந்திருந்த காணியில் கனிய மணல் அகழவுமேற்கொள்வதற்கு கனிய மணல் கூட்டுத்தாபத்தினர் அனுமதி கோரியுள்ளது. அவ்விடத்தில் மணல் அகழ்வு மேற்கொண்டால் பல பிரச்சினைகள் ஏற்படும் என்பதனால் மணல் அகழ்வுக்கு அனுமதி வழங்க வேண்டாம் என்று பொது மக்களும், அமைப்பினரும் கோரிக்கை விடுத்துள்ளனர். மீறி அனுமதி வழங்கினால் போராட்டம் நடத்துவோம் என்றும் கூறுகின்றனர்.

எனவே, பொதுமக்கள் எதிர்ப்பு வெளியிடுவதன் காரணமாக மேற்படி இடத்தில் மணல் அகழ்வுக்கு அனுமதி வழங்க வேண்டாம்.

புல்மோட்டை கனிய மணல் கூட்டுத்தாபனத்தில் கடந்த அரசு காலத்தில் 100 பேருக்கு நியமனங்கள் வழங்கப்பட்டன. இதில் தென்னிலங்கையைச் சேர்ந்த 17 பேருக்கு மாத்திரம் சம்பளம் வழங்கப்படுகிறது. ஏனைய 83 பேருக்கும் சுமார் ஒரு வருட காலமாகச் சம்பளம் வழங்கப்படாதுள்ளது. சம்பளம் வழங்கப்படாதுள்ள 83 பேருக்கும் உடனடியாக சம்பளத்தையும், சம்பள நிலுவையையும் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இக்பால் நகர் மற்றும் பெரியகுளம் பிரதேசத்தைச் சேர்ந்த விவசாயிகள் 1972ஆம் முதல் கொக்கங்குளம் பிரதேசத்தில் விவசாயத்தில் ஈடுபட்டு வந்துள்ளனர், அங்கு 45 தமிழர்களுக்கும், 20 முஸ்லிம்களுக்கும் காணிகள் உண்டு, யுத்த நிலைமை காரணமாக விவசாய நடவடிக்கைகளை கைவிட்டவர்கள், யுத்தம் முடிவடைந்த பின்னர் அவர்களின் காணிகளைத் துப்பரவு செய்யச் சென்ற போது அதிகாரிகளால் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. பல வருடங்களாக விவசாயம் செய்துவந்தவர்களுக்கு அந்தக் காணியை துப்பரவு செய்து மீண்டும் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அனுமதிப்பது சம்பந்தமாகவும் இதன்போது பிரேரணை முன்வைக்கப்பட்டது.

இக்பால் நகர் கிராமத்தில் 211 குடும்பங்களுக்கு வீட்டுத் திட்டத்துக்குக் காணி வழங்கப்பட்டு மேலதிகமாக 2 ஏக்கர் காணி பொதுத் தேவைக்கு என ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது. அந்தக் காணியை புதிய பாடசாலை ஒன்றை ஆரம்பிப்பதற்கு வழங்குவது சம்பந்தமாகவும் பேசப்பட்டது.

இறக்கக்கண்டி சின்னக்கரச்சை எனுமிடத்தில் 109 பேருக்கு காணி அனுமதிப் பத்திரம் வழங்குவதற்கான அனுமதி கிடைக்கப்பெற்ற போதிலும், 100 பேருக்கு மாத்திரம் காணி அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளது.மிகுதி 09 பேருக்கும் பல வருடங்கள் கடந்தும் இதுவரை அனுமதிப் பத்திரம் வழங்கப்படவில்லை. மிகுதி 09 பேருக்கும் காணி அனுமதிப்பத்திரங்களை வழங்குவது சம்பந்தமாகவும் பிரேரணையை முன்வைத்தார்.





# நுவரெலியா மாவட்டத்தில் கடும் காற்றுடன் கன மழை

## விமல் சுரேந்திர நீர் தேக்கம் வான் பாய்கிறது

(மஸ்கெலியா )

மத்திய மலைநாட்டில் நுவரெலியா மாவட்டத்தில் கடும் காற்றுடன் கன மழை பெய்து வருகின்றது. இதன் காரணமாக விமல் சுரேந்திர நீர் தேக்கத்தின் நீர் வான் பாய்கிறது.

இன்று (19) மதியம் முதல் வான் பாய்கிறது. இதன் காரணமாக தாழ் நிலப் பகுதியில் உள்ள அனைத்து மக்களும் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும் என லக்சபான நீர் மின் நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்தக் கன மழை காரணமாக ஹட்டன் நகரில் குடியிருப்பு மீது பாரிய மண் திட்டு சரிந்து விழுந்ததுள்ளது. அந்தப்பகுதியில்உள்ள பாதுகாப்புக்கட்டம் சரிந்து விழும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

நேற்று இரவு வீசிய காற்று காரணமாக நல்லதண்ணி பொலிஸ் பிரிவில் உள்ள பல பகுதிகளில் மின் இணைப்பு துண்டிக்க பட்டுள்ளது. ஆங்காங்கே மரங்கள் முறிந்து வீழ்ந்தால் போக்குவரத்து தடைபட்ட போதும் அவ்வப்போது அவை அகற்றபட்டு போக்குவரத்து சீர் செய்யப்பட்டுள்ளது என நல்லதண்ணி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.



# தாய்மார் ஆதரவு கழகத்தின் ஏற்பாட்டில் பெண்களுக்கான தையல் பயிற்சி நெறி

(அபு அலா )

அம்பாறை – சின்னப் பாலமுனை தாய்மார் ஆதரவு கழகத்தின் ஏற்பாட்டில் பெண்களுக்கான தையல் பயிற்சி பாடநெறி சின்னப் பாலமுனை சுகாதார நிலையத்தில் ஆரம்பித்து வைக்கப் பட்டுள்ளது.

தாய்மார் ஆதரவு கழகத்தின் தலைவி திருமதி என்.சுமைறா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வுக்குப் பிரதம அதிதியாக அட்டாளைச்சேனை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் ஏ.எம்.எம்.இஸ்ஸதீன் கலந்துகொண்டு குறித்த தையல் பயிற்சி பாடநெறி கட்டடத்தை திறந்து வைத்தது பயிற்சி பாடநெறியை ஆரம்பித்து வைத்தார்.

3 மூன்று மாத காலத்தை அடிப்படையாகக் கொண்ட இந்தப் பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்து வெளியேறுவோர் தங்களின் பொருளாதாரத்தில் பாரிய முன்னேற்றத்தை அடையமுடியும் எனவும் இந்த முன்மாதிரிமிக்க வேலைத் திட்டத்தை ஆரம்பித்து வைக்கப் பாடுபட்டவர்களை பாராட்டுகிறேன் என்றும் அட்டாளைச்சேனை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் ஏ.எம்.எம்.இஸ்ஸதீன் தெரிவித்தார்.

இந்தப் பயிற்சி நெறியில் இணைந்து கொள்ள விரும்பும் பெண்கள் குறித்த நிர்வாகத்தை தொடர்புகொண்டு இணைந்து கொள்ளமுடியும் என ஆலோசனையையும் வழங்கி வைத்தார்.








# சுவாமி விபுலானந்த அடிகளாரின் மகாசமாதி தின நிகழ்வு காரைதீவில்

**(வி.ரி. சகாதேவராஜா)**

உலகின் முதல் தமிழ் பேராசிரியர் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரின் 78 ஆவது மகாசமாதி தின நிகழ்வு இன்று சனிக்கிழமை (19) காலை அவர் அவதரித்த காரைதீவில் நடைபெற்றது.

காரைதீவு விபுலாநந்தர் ஞாபகார்த்தப் பணி மன்றத்தினர் இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையோடு இந்த நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தனர்.

அம்பாறை மாவட்ட மேலதிக அரச அதிபர் சிவ.ஜெகராஜன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

திருமுன்னிலை அதிதியாக கண்ணகி அம்மன் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ பிரியதர்ஷன் குருக்கள் கலந்து நந்திக் கொடி ஏற்றினார்.

நிகழ்வில் சிறப்பு அதிதிகளாக ஓய்வு நிலை சம்மாந்துறை வலய உதவி கல்வி பணிப்பாளரும் பணி மன்ற ஆலோசகருமான வி.ரி.சகாதேவராஜா உள்ளிட்ட பிரபமுகர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

சுவாமி விபுலாநந்தர் கற்கை நிலைய மாணவர்களின் கலை நிகழ்வுகள், சிறப்புரைகள் ஆகியவையும் இடம் பெற்றன.




## திருநெல்வேலி தலங்காவற் பிள்ளையார் கோவில்

# மஹோற்சவத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட சமய அறிவுப் போட்டியின் பரிசளிப்பு நிகழ்வு

மாணவர்களிடையே சமய அறிவையும் அதன் மூலம் ஒழுக்க நெறியையும் வளர்த்தெடுக்கும் நோக்குடன் திருநெல்வேலி தலங்காவல் பிள்ளையார் கோவில் வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு ஆண்டுதோறும் நடத்தப்படும் சமய அறிவுப் போட்டி இந்த முறையும் நடைபெற்றுள்ளது.

அதற்கான பரிசளிப்பு நிகழ்ச்சி கடந்த திங்கட்கிழமை தீர்த்தோற்சவத்தன்று ஆலய முன்றலில் இடம்பெற்றது.

தரம் 3 தொடக்கம் 11 வரை பயிலுகின்ற 226 மாணவர்கள் எழுத்துமூலப் பரீட்சையில் தோற்றியிருந்தார்கள். இவர்களில் 127 பேர் பரிசுக்கு உரியவர்களாகத் தெரிவுசெய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டன.

ஆனைப்பந்தி மெதடிஸ்ற் மிசன் வித்தியாலயத்தில் தரம் 3 இல் பயிலும் செல்வன் தர்மேந்திரா தனோசியன் என்னும் மாணவன் 95 புள்ளிகளைப் பெற்றுத் தங்கப் பதக்கத்தைப் பெற்றுக் கொண்டார்.

இந்தப் பதக்கம் அமரர் சி. பொன்னுத்துரை, அமரர் பொ. தங்கமாணிக்கம் ஆகியோர் ஞாபகார்த்தமாக வழங்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில் வடமாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் எந்திரி ச. சர்வராஜா பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டிருந்தார்.

ஆலய பிரதமகுரு விக்னராஜா சர்மா முன்னிலையில் நடைபெற்ற இப்பரிசளிப்பு நிகழ்ச்சியில் பரீட்சைக்குழு சார்பாகத் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன், ஆனைப்பந்தி அமெரிக்கன் மிசன் பாடசாலை அதிபர் யோ.ஜெக ஆனந்தம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.






# அதிக உறுப்பினர்களை சேர்க்கும் நிர்வாகிகளின் வீடுகளுக்கு நேரில் செல்வதற்கு விஜய் திட்டம்

த.வெ.கவில் அதிக உறுப்பினர்களை சேர்க்கும் நிர்வாகிகள் வீட்டுக்கு நேரில் சென்று அவர்களை கௌரவிக்க விஜய் திட்டமிட்டுள்ளார் என தகவல் வெளியாகி உள்ளது. இதனால், தொண்டர்கள் உற்சாகமடைந்து உறுப்பினர் சேர்க்கை பணியை தீவிரப்படுத்தியுள்ளனர்.

தமிழக வெற்றிக் கழகத்தில் 2 கோடி உறுப்பினர்கள் என்ற இலக்குடன் உறுப்பினர் சேர்க்கும் பணி நடைபெற்று வருகிறது. உறுப்பினர் சேர்க்கைக்காக கடந்த ஆண்டு மார்ச் மாதம் 8ஆம் திகதி 'கியூஆர் கோடு' இணைப்பை விஜய் அறிமுகம் செய்து, த.வெ.கவில் முதல் உறுப்பினராக இணைந்தார். அதனை தொடர்ந்து, கியூ ஆர் இணைப்பை பயன்படுத்தி, வாட்ஸ் அப், டெலிகிராம் மற்றும் இணையதளம் மூலமாக த.வெ.கவில் உறுப்பினர்களாக இணைய, நிர்வாகிகள், தொண்டர்கள், பொதுமக்களுக்கு விஜய் அழைப்பு விடுத்தார்.

'கியூ ஆர் கோடு' இணைப்பை அறிமுகம் செய்த சில நிமிடங்களிலேயே, லட்சக்கணக்கானோர் அதைபயன்படுத்தி உறுப்பினர்களாக சேர முயன்றதால், இணையதளம் முடங்கியது.

இதையடுத்து, கட்சி நிர்வாகிகள் மூலம் பொதுமக்களின் வீடு வீடாக சென்று உறுப்பினர் சேர்க்கை பணியை தீவிரப்படுத்த விஜய் உத்தரவிட்டார். உறுப்பினர்களாக இணைந்தவர்களுக்கு அடையாள அட்டையும் வழங்கப்பட்டது. அந்த வகையில், தற்போதுவரை தமிழக வெற்றிக் கழகத்தில் 80 லட்சம் பேர் உறுப்பினர்களாக இணைந்துள்ளனர்.

இந்நிலையில், கடந்த 4 ஆம் திகதி பனையூரில் நடைபெற்ற த.வெ.க. செயற்குழு கூட்டத்தில் உறுப்பினர் சேர்க்கையை மேலும் தீவிரப்படுத்த வேண்டும் என்றும், சட்டப்பேரவை தேர்தல் நெருங்குவதால் விரைவில் 2 கோடி உறுப்பினர்கள் இலக்கை எட்ட வேண்டும் என்றும் நிர்வாகிகளுக்கு விஜய் அறிவுறுத்தினார். மேலும், உறுப்பினர் சேர்க்கைகாக புதிய செயலி விரைவில் அறிமுகம் செய்யப்படும் என கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

அந்தவகையில், உறுப்பினர் சேர்க்கை செயலி வடிவமைக்கும் பணிகள் முடிவடைந்து, நாளை ஞாயிற்றுக்கிழமை பனையூரில் நடைபெறும் மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தில் விஜய் அறிமுகம் செய்ய இருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது. அப்போது, செயலியை பயன்படுத்துவதற்கான பயிற்சியும் கூட்டத்தில் அளிக்கப்பட்டு, செயலி வாயிலாக உறுப்பினர் சேர்க்கை பணிகள் தொடங்க இருப்பதாக கூறப்படுகிறது.

அதேபோல அதிக உறுப்பினர்களை சேர்க்கும் நிர்வாகியை அவரது வீட்டுக்கு நேரில் சென்று விஜய் சந்தித்து கௌரவிப்பார் என்று த.வெ.க. வட்டாரத்தில் கூறப்பட்டு வருகிறது.

இதனால், தொண்டர்கள் இப்போதே உற்சாகமடைந்து, உறுப்பினர் சேர்க்கும் பணியை தீவிரப்படுத்தி உள்ளனர். மேலும், இந்த கூட்டத்தில் மதுரையில் ஓகஸ்ட் 25 ஆம் திகதி நடைபெறும் மாநாடு, சுற்றுப்பயணம் குறித்தும், கட்சியின் அடுத்த கட்ட பணிகள் குறித்தும் சில அறிவிப்புகள் வெளியாகலாம் எனவும் கூறப்படுகிறது.

# இந்தியாவுக்கு துரோகம் செய்தால் விளைவுகளை சந்திக்க நேரிடும்

## மத்திய அமைச்சர் அமித் ஷா எச்சரிக்கை



இந்தியாவுக்கு துரோகம் செய்தால் அதன் விளைவுகளை எதிர்கொள்ள நேரிடும் என்று மத்திய அமைச்சர் அமித் ஷா தெரிவித்துள்ளார்.

சர்வதேச கூட்டுறவு ஆண்டு 2025 ஐ முன்னிட்டு ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூரில் நேற்று முன்தினம் நடைபெற்ற விழாவில் மத்திய உள்துறை மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அமித் ஷா பங்கேற்றார்.

அந்த விழாவில் அவர் மேலும் உரையாற்றுகையில், "ஒபரேஷன் சிந்தூர் நடவடிக்கை மூலம் இந்திய மக்களுக்கும், அதன் எல்லைக்கும், அதன் பாதுகாப்பு படைகளுக்கும் துரோகம் செய்யக் கூடாது என்ற வலுவான செய்தி உலகுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு துரோகம் செய்பவர்கள் அதன் விளைவுகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும்.

நாட்டை பாதுகாப்பதில் பிரதமர் நரேந்திர மோடி மிகப் பெரிய பணியை செய்துள்ளார். காங்கிரஸ் ஆட்சியின்போது, கிட்டத்தட்ட ஒவ்வொரு நாளும் தீவிரவாத தாக்குதல்களால் நாடு பாதிக்கப்பட்டது.

அடுத்த 100 ஆண்டுகள் கூட்டுறவுக்கான ஆண்டுகளாக இருக்கும். கூட்டுறவுச் சங்கங்களை ஒவ்வொரு கிராமத்துக்கும் ஒவ்வொரு ஏழைக்கும், ஒவ்வொரு விவசாயிக்கும் கொண்டு செல்லும் நோக்கத்தில் மத்தியில் கூட்டுறவு அமைச்சகம் தனி அமைச்சகமாக நிறுவப்பட்டுள்ளது." என்றார்.




# 100 பெண்கள் துஷ்பிரயோகம் செய்யப்பட்டு கோயிலில் புதைப்பு; கர்நாடகாவில் பரபரப்பு

பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்பட்ட 100 பெண்கள் கொலை செய்யப்பட்டு கோயில் நிலத்தில் புதைக்கப்பட்டனர் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

கர்நாடக மாநிலத்தில் இந்த சம்பவம் இடம்பெற்றதாக அங்குள்ள கோயில் ஒன்றின் முன்னாள் ஊழியர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 1998 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரை தர்மஸ்தலாவில் நூற்றுக்கும் மேற்பட்ட பெண்கள் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டனர் என அவர் கூறியுள்ளார்.

மேலும், அவர்களின் உடலங்களை இரகசியமாகப் புதைக்குமாறு தன்னை கோயில் மேற்பார்வையாளர்கள் வற்புறுத்தினர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதையடுத்து இந்த முறைப்பாட்டின் அடிப்படையில் வழக்குப் பதிவு செய்த பொலிஸார், கோயிலின் முன்னாள் ஊழியரைக் கைதுசெய்து விசாரித்து வருகின்றனர் என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

# கருணாநிதியின் மகன் மு.க.முத்து காலமானார்





தமிழக முன்னாள் முதல்வர் மு.கருணாநிதியின் மூத்த மகன் மு.க.முத்து உடல்நலக்குறைவால் காலமானார். அவருக்கு வயது 77.

முன்னாள் முதல்வர் கருணாநிதி – பத்மாவதி தம்பதிக்கு 1948 ஆம் ஆண்டு மகனாக பிறந்த மு.க.முத்து 1970 களில் தமிழ் சினிமாவில் நடிகராக அறிமுகமானார்.

'பிள்ளையோ பிள்ளை', 'சமையல்காரன்', 'அணையாவிளக்கு', 'இங்கேயும் மனிதர்கள்' 'பூக்காரி' உள்ளிட்ட படங்களில் நடித்தார். தான் நடித்த படங்களில் சில பாடல்களையும் பாடியிருக்கிறார். தி.மு.க. மேடைகளிலும் கட்சியின் கொள்கை விளக்க பாடல்களை பாடியுள்ளார்.

எம்.ஜி.ஆருக்கு போட்டியாக சினிமாவில் களமிறக்கப்பட்டவர் என்ற பொதுவான கருத்து நிலவினாலும், மு.க.முத்து நடித்த 'பிள்ளையோ பிள்ளை' படத்தின் படப்பிடிப்புக்கு வந்து கிளாப் அடித்து எம்.ஜி.ஆர் படப்பிடிப்பை தொடங்கி வைத்தார்.

கடந்த 2006 ஆம் ஆண்டு தேவா இசையில் 'மாட்டுத் தாவணி' என்ற படத்தில் ஒரு பாடல் பாடியிருந்தார் மு.க.முத்து.

இந்த நிலையில், உடல்நலக்குறைவு காரணமாக சென்னையில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த மு.க.முத்து சிகிச்சை பலனின்றி இன்று (ஜூலை 19) காலமானார். அவரது உடல் ஈஞ்சம்பாக்கத்தில் உள்ள அவரது வீட்டில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது.










# தென் கொரியாவில் கனமழை காரணமாக நால்வர் உயிரிழப்பு

## 1,300 பேர் வெளியேற்றம்

தென் கொரியாவில் பெய்து வரும் கனமழையால் நான்கு பேர் உயிரிழந்துள்ளதுடன், 1,300 இற்கும் மேற்பட்டோர் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

அதேநேரம், கன மழை தொடரும் என்று அந்நாட்டு வானிலை ஆய்வு நிலையம் எச்சரித்துள்ளது.

உயிரிழந்தவர்களில் 80 வயதுடைய இரண்டு ஆண்களும் அடங்குவர்.

வரலாறு காணாத மழைப் பொழிவானது வானிலை தொடர்பான பேரிடர் எச்சரிக்கையை தூண்டுவதற்கு வழி வகுத்துள்ளது.

நாட்டின் மேற்கு கடற்கரையில் மிக மோசமாக பாதிக்கப்பட்ட நகரமான சியோசனில் 12 மணி நேரத்தில் 400 மில்லிமீற்றருக்கும் அதிகமான மழை பெய்தது.

இது ஒரு நூற்றாண்டில் பதிவு செய்யப்பட்ட அதிகூடிய மழை வீழ்ச்சி என தென்கொரிய வானிலை ஆய்வு நிறுவனம் கூறியுள்ளது.

மண்சரிவுகள் மற்றும் திடீர் வெள்ள அபாயம் தொடர்ந்து அதிகமாக இருப்பதால், ஆற்றங்கரைகள், மலைச் சரிவுகள் மற்றும் தாழ் நிலநப் பகுதிகளில் இருந்து வெளியேறுமாறு அதிகாரிகள் மக்களை வலியுறுத்தியுள்ளனர்.

வெள்ளம் தொடர்பில் சமூக ஊடகங்களில் வெளியாகும் புகைப்படங்கள் மற்றும் காணொலிகளில் வாகனங்கள், வீடுகள் நீரில் மூழ்கியிருப்பதையும், தளபாடங்கள் தண்ணீரில் மிதப்பதையும் காட்டுகின்றன.










# பன்றிகள் அழிக்கப்படுவதால் சீர்குலையும் உணவு விநியோகம்

வியட்நாமில் ஆப்பிரிக்க பன்றிக் காய்ச்சல் வேகமாகப் பரவி வருவதாக அந்நாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின் றன.

இந்த வைரஸ் தற்போது நாட்டின் 34 மாகாணங்களுக்குப் பரவியுள் ளது.

மேலும் 30,000க்கும் மேற்பட்ட பாதிக்கப்பட்ட பன்றிகள் அழிக்கப்பட் டுள்ளன என அந்நாட்டு அரசு ஒரு அறிக் கையில் தெரிவித்துள்ளது.

இருப்பினும், இந்த நிலைமை தென் கிழக்கு ஆசிய நாடுகளின் உணவு விநி யோகத்தைச் சீர்குலைக்கும் என்றும் அந்நாட்டு அரசு எச்சரித்துள்ளது.

# புலம்பெயர்தலை கட்டுப்படுத்தும் நோக்கில் பிரித்தானியாவில் புதிய விதிகள் நடைமுறை



பிரித்தானிய அரசு, புலம்பெயர் தலை கட்டுப்படுத்தும் நோக்கில், ஜூலை 22ஆம் திகதி முதல் புதிய விதி களை நடைமுறைக்கு கொண்டுவருகி றது.

அதன்படி, திறன் வாய்ந்த வேலை தேடுபவர்கள் குறைந்தபட்ச ஆண்டு வருமான வரம்பு 38,700 யூரோ இலி ருந்து 41,700 யூரோவாக உயர்த்தப் படுகிறது.

இந்த வரம்பு உயர்வின் விளைவாக, 111 வகையான வேலைகளை செய்யும் வெளிநாட்டவர்கள் இனி பிரித்தானி யாவில் பணியாற்ற முடியாத நிலை உருவாகும்.

நல பணியாளர்கள் இனி வெளி நாடுகளில் இருந்து வேலைக்கு எடுக் கப்படமாட்டார்கள்.

இதேவேளை, 2026ஆம் ஆண்டின் இறுதிக்குள், பட்டப்படிப்பு படிக்காத சில தொழில்களுக்குச் சேர்ந்தவர்கள், தங் களின் குடும்ப உறுப்பினர்களை பிரித் தானியாவிற்கு அழைத்து வர முடி யாது.

அத்துடன், ஆண்டின் இறுதியில், மொழித்தகுதி, ஊக்கச் சான்றிதழ்கள் (Certificates of Sponsorship - CoS) மற்றும் குடும்ப விசா நிபந்தனைகள் தொடர் பிலும் புதிய மாற்றங்கள் மேற்கொள்ளப் பட உள்ளன.

இந்த புதிய நடவடிக்கைகள், நாட்டு உள்நாட்டு வேலை வாய்ப்புகளை பாது காக்கவும், மக்கள் வரப்போக்கை கட் டுப்படுத்தவும் பிரித்தானிய அரசாங் கத்தால் எடுக்கப்பட்ட முயற்சியாகப் பார்க்கப்படுகிறது.

பக்கங்கள் 03

கனடா முரசு

சனிக்கிழமை | 19/07/2025

## மோசடி குற்றச்சாட்டில் சட்டத்தரணிகள் கைது




டொரொண்டோ நகரத்தில் காணி தொடர்பான பல விற்பனைப் பத்திரங்களில் இடம் பெற்ற 03

# டொராண்டோவில் இனக்குரோத தாக்குதல் நடத்தியவர் கைது

டொராண்டோவில் இனக்குரோத அடிப்படையில் செயற்பட்ட ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வாகன ஓட்டுனர் ஒருவரைத் தாக்கி, இனம் சார்ந்த கடுமையான சொற்களை உரைத்ததாகக் கூறப்படும் சம்ப வத்தின் அடிப்படையில் மேற்படி நபர் கைது செய்யப்பட்டுள்ளார். 03




# அமெரிக்காவிலிருந்து கனடாவுக்குள் போதைப்பொருள் கடத்தியவர் கைது



அமெரிக்காவிலிருந்து கனடாவுக்குள் பெருமளவில் போதைப்பொருளை கொண்டு வந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியாவிலுள்ள Osoyoos என்னும் எல்லை கடக்கும் இடத்தில் கனேடிய அதிகாரிகள் வாகன சோதனையில் ஈடுபட்டிருந்திருக்கிறார்கள்.

அப்போது அமெரிக்காவிலிருந்து கனடாவுக்குள் நுழையும் கனேடியர் ஒருவரது ட்ரக்கை அதிகாரிகள் சோதனையிட்டுள்ளார்கள்.

அப்போது 70 கிலோ அளவிலான கொக்கைன் என்னும் போதைப்பொருள் செங்கல் வடிவில் அந்த ட்ரக்குக்குள் மறைத்துவைக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அது, 140,000 முறை பயன்படுத்தப்படும் அளவுடைய போதைப்பொருள் என்கிறார்கள் அதிகாரிகள்.

ட்ரக்கை இயக்கிவந்த நபர் கைது செய் யப்பட்டுள்ளார். அவரிடம் அதிகாரிகள் விசாரணை மேற்கொண்டுவருகிறார்கள்.




# இந்தியா - கனடா உறவுகளில் மீண்டும் முன்னேற்றம் ஏற்பட்டது

கனடாவில் நடைபெற்ற ஜி7 உச்சி மாநாட்டின் போது பிரதமர் நரேந்திர மோடி மற்றும் கனேடிய பிரதமர் மார்க் கார்னி சந்தித்து இருதரப்பு உறவுகள் குறித்து விவாதித்தனர்.

ஜனநாயக மதிப்புகள், சட்டத்தின் ஆட்சி மற்றும் இறையாண்மைக்கு மரியாதை ஆகியவற்றின் அடிப்படையில் இந்தியா–கனடா உறவுகளை வலுப்படுத்துவதன் அவசியத்தை இரு தலைவர்களும் வலியுறுத்தினர்.

இது குறித்து கருத்துத் தெரிவித்த இந்திய வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் ரந்தீர் ஜெய்ஸ்வால்,

“உயர் ஆணையர்களை மீண்டும் நியமிப்பதன் மூலம் உறவுகளில் நிலைத்தன்மையை மீட்டெடுக்க ஆக்கபூர்வமான, அளவீடு செய்யப்பட்ட நடவடிக்கைகளை இரு தரப்பினரும் எடுக்க ஒப்புக்கொண்டுள்ளனர்.” எனத் தெரிவித்துள்ளார்.

பதற்றத்துக்குக் காரணமான சர்ச்சை ஜூன் 2023 இல் காலிஸ்தான் ஆதரவாளர் ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கொலை வழக்கில் இந்தியாவுக்கு தொடர்பு உள்ளதாக கனடாவின் முன்னாள் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ குற்றம் சாட்டியதைத் தொடர்ந்து, இரு நாடுகளுக்கும் இடையிலான உறவில் கடுமையான பதற்றம் ஏற்பட்டது.

இந்த குற்றச்சாட்டுகளை இந்தியா முழுமையாக மறுத்ததோடு, ஆறு கனேடிய தூதர்களை நாடு கடத்தியது. அதே சமயம் இரு தரப்பிலும் சில ராஜதந்திரிகள் திரும்ப அழைக்கப்பட்டனர்.

இந்நிலையில் கனடாவில் தலைமை மாற்றம் ஏற்பட்டதால் மார்க் கார்னி பிரதமராக பொறுப்பேற்றார். இதையடுத்து இருதரப்பு உறவுகளை மேம்படுத்தும் நோக்கில் இரு நாடுகளும் பேச்சுவார்த்தைகளைத் தொடங்கியுள்ளன. வர்த்தகம், டிஜிட்டல் உள்கட்டமைப்பு உள்ளிட்ட பல துறைகளில் இணைந்து செயல்படுவதற்கான ஆலோசனைகளும் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# இரு இந்தியர்களுக்கு சிறை; நாடுகடத்தப்படும் அபாயம்





கனடாவில் விபத்தொன்றை ஏற்படுத்திய இந்தியர்கள் இருவர் நாடுகடத்தப்படும் நிலை உருவாகியுள்ளது.

2024ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 27ஆம் திகதி, கனேடிய பொலிஸார் ககன்பிரீத் சிங் (வயது 22) மற்றும் ஜக்தீப் சிங் (வயது 22) ஆகிய இருவரையும் கைது செய்தார்கள்.

43 வயதுடைய பூர்வக்குடியினரான ஒருவர் மீது காரை மோதியதுடன், அவர் காருக்கு அடியில் சிக்கியிருக்கிறார் என்பது தெரிந்தும் அவரை 1.3 கிலோமீற்றர் தூரம் வரை இழுத்துச் சென்றதே அவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் ஓரிடத்தில் காரை நிறுத்தி, காருக்கடியில் சிக்கியிருந்த நபரின் சடலத்தை வெளியே இழுத்துப் போட்டுவிட்டு அங்கிருந்து தப்பியோடியுள்ளார்கள்.

ககன்பிரீத் மற்றும் ஜக்தீப் ஆகிய இருவருக்கும் தற்போது மூன்று ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், அவர்களுடைய தண்டனைக்காலம் முடிவடைந்ததும் இருவரையும் நாடுகடத்தவும் திட்டமிட்டுள்ளதாக கனேடிய எல்லை பாதுகாப்பு ஏஜன்சி தெரிவித்துள்ளது.

# கப்பலிலிருந்து கடலுக்குள் விழுந்த பெண்ணை தேடும் பணிகள் தீவிரம்



கனடாவின் நொவா ஸ்கோஷியா மற்றும் நியூஃபவுண்லாந்த் - லாப்ரடார் மாகாணங்களுக்கு இடையில் கப்பலில் பயணித்த ஒரு பெண் கடலில் விழுந்துள்ளார்.

இந்த நிலையில், மீட்புக் குழுவினர் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

காணாமல் போனவர் 41 வயதுடையவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த புதன்கிழமை அதிகாலை 3.30 மணியளவில், மரீன் அட்லாண்டிக் புளூ புடீஸ் கப்பலின் ஊடான கடல் பயணத்தின் போது கடைசியாக காணப்பட்டுள்ளார்.

அந்தப் கப்பல் நொவா ஸ்கோஷியா இருந்து நியூஃபவுண்லாந்த் நோக்கி பயணித்ததுள்ளது.

# டொரொன்டோவில் மற்றொரு துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் பலி

கனடாவின் டொரொன்டோ நகரிலுள்ள யோர்க்டேல் சொப்பிங் மால் வாகனத் தரிப்பிடப் பகுதியில் ஏற்பட்ட துப்பாக்கிச்சூட்டில் மொன்ட்ரியாலைச் சேர்ந்த 28 வயதான நபர் உயிரிழந்துள்ளார்.

காலை 6 மணியளவில் டுப்ரின் வீதி மற்றும் 401 ஆம் இலக்க அதிவேக நெடுஞ்சாலை அருகிலுள்ள பிரபலமான இந்த ஷாப்பிங் மாலில் துப்பாக்கி வெடித்தது குறித்து தகவல் கிடைத்ததும், பொலிஸார் உடனடியாக சம்பவ இடத்திற்கு விரைந்தனர்.

அங்கு துப்பாக்கிச்சூட்டு காயங்களுடன் ஒரு நபர் மீட்கப்பட்டார்.

பின்னர் அந்த நபர் உயிரிழந்துள்ளதாக உறுதிப்படுத்தப்பட்டது.

இது திட்டமிட்டு நடத்தப்பட்ட தாக்குதலாக தெரிகிறது எனவும் இந்த நபரின் குடும்பத்தினருக்கு தகவல் தெரிவிக்கப்படும்வரை அவருடைய பெயரை வெளிப்படுத்த முடியாது எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்ட போது மால் திறக்கப்படவில்லை என ஷாப்பிங் மால் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

## மோசடி குற்றச்சாட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மோசடிகளின் அடிப்படையில் இரண்டு சட்டத்தரணிகள் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கார்டல் என்ட் புய் என்ற சட்ட நிறுவனத்தில் பங்குடமையாளர்களான சட்டத்தரணி சிங்கா புய் (வயது 42) கடந்த 2021 முதல் 2024 வரையிலான காலப்பகுதியில் தனது சேவை பெறுனர்கள் உட்பட பலரை மோசடியின் மூலம் ஏமாற்றியதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

அவர்மீது தற்போது மொத்தம் 42 குற்றச்சாட்டுகள், அதில் 5,000 டொலருக்கும் மேற்பட்ட மோசடி தொடர்பான 24 வழக்குகள், மேலும் நம்பிக்கையை மீறிய குற்றச்சாட்டுகள் 17 என வகைப்படுத்தப்பட்டுள்ளன.

அதே நிறுவனத்தின் மற்றொரு பங்குடமையாளரான நிக்கோலஸ் கார்டெல் (வயது 61) மீது ஒரு மோசடி வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

ஒன்டாரியோ சட்ட சங்கத்தின் தகவலின்படி, தற்போது சிங்கா புயும், நிக்கோலஸ் கார்டெலும் பணிநீக்கம் செய்யப்பட்ட நிலையில் உள்ளனர்.

இந்த குற்றச்சாட்டுக்கள் தொடர்பான விசாரணைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

## டொராண்டோவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்த சம்பவம் வெறுப்பைத் தூண்டும் குற்றமாக பொலிஸாரால் விசாரிக்கப்பட்டு வருகிறது.

புளோர் மேற்கு மற்றும் டோவர் கோர்ட் பகுதியில் ஒரு தாக்குதல் தொடர்பான தகவலைப் பெற்ற பொலிஸார் சம்பவ இடத்திற்கு விரைந்தனர்.

விசாரணையின் போது, பாதிக்கப்பட்ட நபர் வாகனத்தில் நின்றபோது, பாதையில் நடந்து வந்த ஒருவர் இனக் குரோத அடிப்படையில் செயற்பட்டுள்ளார் என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

மேற்படி நபர் இனவெறிப் பேச்சுகளை வெளியீட்டுக்கார் என்றும் பின்னர் தாக்குதல் நடத்தினார் எனவும் தெரிவித்தனர்.

இதனால், வாகன ஓட்டுநருக்கு லேசான காயங்கள் ஏற்பட்டதாக கூறப்படுகிறது. பொலிஸார் பின்னர் சந்தேக நபரை அடையாளம் கண்டு கைது செய்துள்ளனர்.

டொராண்டோவைச் சேர்ந்த 52 வயதான க்ளென் மெக்டொனால்ட் என்பவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.